


விவசாயத் திணைக்களத்தின் இணைய செய்தி மடல் | மலர் 10 - இதழ் 12 | 2023 ஆகஸ்ட் | 04 பக்கங்கள்

விவசாய திணைக்களம்,
த .இ. 01
பழைய கலகா பாதை.
பேராதனை
தொலைபேசி இல : 081 2388331
081 2388332
081 2388334
இணைய பக்கம் : www.doa.gov.lk

**உங்களது கருத்துக்களையும் எண்ணங்களையும் எமக்கு அனுப்புங்கள்**
பிரதி விவசாய பணிப்பாளர்.
த.பே 24. விவசாய
பிரசுர அலகு.
கன்னொருவ
தொலைபேசி இல ( 081 205 8282 )
மின் அஞ்சல் : agripress.doa@gmail.com
FOLLOW US ON facebook
facebook.com/agripublicationunit




1920
விவசாய ஆலோசனை சேவை உங்கள் அனைத்து பிரச்சனைக்காகவும் அழையுங்கள்

கிழமை நாட்களில்
மு. ப 8.30 தொடக்கம்
பி.ப 4.15 வரை

# விவசாய திணைக்களத்தின் 25 ஆவது வருடாந்த மாநாடு கன்னொருவையில்






25th Anniversary
ASDA

விவசாய திணைக்களத்தின் 25 ஆவது வருடாந்த மாநாடு 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி கன்னொருவ தாவர பிறப்புரிமை மூலவள நிலையத்தில் விவசாய அமைச்சர் கௌரவ மஹிந்த அமரவீர தலைமையில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம் மாநாடு “நாளைக்கான தொழில்நுட்ப விவசாயம்” ("Tech- Driven Agriculture for Tomorrow") என்பதை தொனிப்பொருளாக கொண்டு நடைபெற உள்ளது. விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சி நிலையங்களில் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் தகவல்கள் அடங்கிய பல ஆய்வுக் கட்டுரைகள் இந்த ஆண்டு மாநாட்டில் வெளியிடப்பட உள்ளன.

2ம் பக்கம்...

1ம் பக்க தொடர்ச்சி...

இம் மாநாட்டிற்கு விவசாய இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி கௌரவ திரு. மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, கால்நடை பராமரிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ டி.பி. ஹேரத் அவர்கள், கிராமிய பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அவர்கள், விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க அவர்கள், விவசாய பணிப்பாளர் நாயகம் செல்வி பி. மாலதி அவர்கள் உள்ளிட்ட விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர்கள் அலுவலர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ள உள்ளனர். இம்முறை மாநாட்டிற்கு இயற்கை வள முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஹர்ஷ கடுபிடிய அவர்கள் தலைமை தாங்கவுள்ளார்.

## 2022ம் ஆண்டில் பழப்பயிர்கள் துறையில் விசேட வெற்றிகள் பல

2022 ஆம் ஆண்டில் பழப்பயிர் துறையில் பல சிறப்பு சாதனைகள் எட்டப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட வருடாந்த செயலாற்று அறிக்கை கூறுகிறது.

முள் சீதா *Annona Muricata* இற்காக உயர் தரத்தில் அதிகூடிய விளைச்சலினைத்தரும் மிகச் சிறந்த விதான கட்டமைப்பாக 3 – 4 கிளைகள் கொண்ட தண்டில் 0.8 – 0.9 மீற்றர் உயரத்தில் வெட்டிக் கத்தரித்தல் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் “வெல் அனோதா” இனை ஒட்டுக்கட்டை ஒன்றாகப் பயன்படுத்தி முள் அன்னாமுன்னாவிற்கான வெற்றிகரமான முறையில் களத்தில் ஒட்டல் செய்யும் முறை ஒன்று அடையாளம் காணப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மில்லியனிற்கு 400 பகுதிகள் எனும் செறிவில் செலிசிலிக் அமிலத்தை தாவர இலைகளுக்குத் தெளிப்பதன் மூலம் முள் அன்னாமுன்னாவின் பூத்தலை ஒரே நேரத்தில் துண்ட முடியுமென்று கண்டறியப்பட்டது எனவும் நெப்தலிக் அசற்றிக் அமிலத்தை (NAA) ஒரு மில்லியனுக்கு 5000 பகுதிகள் என்ற செறிவில் தெளிப்பதன் மூலம் அன்னாமுன்னாவின் துய தன்மையை குறைக்க முடியும் என்பதும் கண்டறியப்பட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.




மேலும் உள்நாட்டுச் சந்தைக்காக சிகப்பு வாழைப்பழத்தை அறுவடை செய்யும் சரியான பருவம் பூபூத்து 13 வரங்கள் என கண்டறியப்பட்டது எனவும் மகடமியாவிற்கு வெற்றிகரமான வித்து முளைத்தல் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயற்கை காளான் வகையான மகந்துரா கபில வர்க்கத்திற்கு பொருத்தமான பயிர்செய்கை தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

3ம் பக்கமிருந்து...

"கொத்மலே" பலாப்பழம் மற்றும் "உலுபிட்டி" ஈரப்பலா வர்க்கவகைகளின் மா பெறுமதி சேர் உற்பத்திக்களை தயாரிக்க ஏற்றதாக கண்டறியப்பட்டது எனவும், மேலும் 50% கோதுமை மா, 10% பலாச்சுளை மா மற்றும் 40% பலா விதை மா ஆகியவற்றின் கலவையானது கையால் செய்யப்பட்ட நூடுல் உற்பத்திக்கு பொருத்தமானது என கண்டறியப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் 2022ம் ஆண்டில் பழப்பயிர் பிரிவில் கீழ்வரும் வெற்றிகள் எட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- லொவி மற்றும் காமரங்காயினைப் பயன்படுத்தி பெறுமதி சேர் உற்பத்திகள் இரண்டு அறிமுகம் செய்யப்பட்டன. உயிரியல் செயற்பாட்டுக் கலவை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளது.
- சிறிய அளவிலான டைக்கோடேர்மாவை பல்பெருக்கம் அடையச்செய்வதற்கான இலாபகரமான காவி ஊடகமாக காட்டு சூரிய காந்தி (Tithonia diversifolia), பருவக்கொடி (Pothos scandens L.) மற்றும் தெப்பட்டி என்பன அடையாளம் காணப்பட்டன.
- மாதுளைப் பழ அழுகும் நோய்க்கு காரணமான நோய்க் காரணியாக Aspergillus violaceofuscus, Lasiodiplodia theoloromae, Phompsis spp, Dioaporthe discodispora மற்றும் Pestalotiopsis spp ஆகிய இனங்கள் உறுதிசெய்யப்பட்டது.
- மாதுளையில் அந்தரக்ளோஸ் நோயை உண்டு பண்ணும் Colletoricum gloesporiodes இற்கான சூழலுக்கு சாதகமான கட்டுப்பாட்டு முறைகள் அடையாளம் காணப்பட்டது.
- வாழையில் அந்திரக்னோஸ் நோயினை ஏற்படுத்தும் *Colletotrichum musae* இற்கு எதிராக தெரிவு செய்யப்பட்ட தாவரச் சாறுகளில், ஆய்வுக் கூட பரிசோதனையில் எதிர் பங்கசுகளின் தோற்றம் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- பொன்னாங்கண்ணியில் (*Alternanthera sessile*) இல் *Cercospora* இலைப் புள்ளி மற்றும் வெள்ளை துரு நோயினை சேதத்தினைக் கட்டுப்படுத்த வேப்பமெண்ணை(3ml/L), சிற்றனல்லா எண்ணெய் (3 ml/L) மற்றும் கராம்பு இலைச்சாறு (350 g/L) தெளிப்பதன் மூலம் குறிப்பிடதக்கவளவு குறைவடைகின்றது என கண்டறியப்பட்டது.
- Agrobacterium பக்டீரியா மூலம் மரபணுவை பப்பாசி வளையப் புள்ளி வைரஸ் புரத மரபணு உறையை உற்பத்தி செய்யும் வளையப்புள்ளி வைரஸ் நோய்க்கு எதிரான மரபணு மாற்று பப்பாசித் தாவரம் உற்பத்தி செய்யப்பட்டது.
- மூலக்கூற்று முறையின் மூலம் கொடித்தோடையின் வைரஸ் நோய்கள் அடையாளம் காணப்பட்டு நேரக் காலத்துடன் கொடிதோடையின் சித்திர வைரஸ்சினை அடையாளம் காண முறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.
- நெமற்டோடு தாக்கமற்ற கொய்யா நடுகை பொருட்களை தயாரிப்பதற்காக கொள்கலன் ஒன்றிற்கு 1 மில்லிலீற்றர் விகிதத்தில் 4001/ SC செறிவினைக் கொண்ட ப்ளுபைரம்களில் அமிழ்த்தி வைத்தல் பரிந்துரைக்கப்பட்டது.
- வாழை வேர் நீழ்முஞ்சி வண்டினினை கட்டுப்படுத்துவதற்கு பெரோமொன் வெளியேற்றும் தொகுதியினை தரைமட்டத்தில் 20 மீற்றர் இடைவெளியில் பொருத்தினால் 3 மாதத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் என கண்டறியப்பட்டது.
- பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட வேப்பம் தயாரிப்பு இரண்டினைத் தெளிப்பதன் மூலம் 7 நாட்களிற்கு பின்னர் மாங்காய்களின் சாற்றினை உறிஞ்சிக்குடிக்கும் பீடை வர்க்கங்கள்

வாழ வைக்கும் விவசாயத்திற்காக....

உயிரும் உழவும்

வசந்தம்
தொலைக்காட்சியில் சனிக்கிழமைகளில்
மாலை 5.15 - 5.30 வரை
ஒளிபரப்பாகும்

இரண்டிற்கும் (Aulacaspis spp மற்றும் சிகப்பு சிலந்தி) எதிராக சாதகமான பெறுபேற்றினை காண முடிந்தது.

- கொஸ்டரிகன் கொய்யா ஒட்டுக்கட்டையில் கொய்யாக் கன்றுகளை ஒட்டச்செய்வதன் மூலம் கொய்யா மரங்களின் வேர்க்கணு நெமடோடாக்களைக் கட்டுப்படுத்த முடியும் என்பது அடையாளம் காணப்பட்டது.
- Eudocima இனங்கள் இரண்டு உட்பட பழங்களின் சாற்றை உயிஞ்சிக் குடிக்கும் சில அந்துப்பூச்சினங்கள் ஈரவலய வீட்டுத் தோட்டங்களில் எழுமிச்சைப் பயிர்களுடன் கலந்து வளர்ந்திருந்த காமரங்கா மரங்களில் அடையாளம் காணப்பட்டது.
- சேதன அன்னாசி உற்பத்திக்கு பொருத்தமான போசணை முகாமை முறைகள் அடையாளம் காணப்பட்டது.
- வருடமொன்றிற்கு ஒரு மரத்திற்கு 200 கிராம் நாக சல்பேற்று மற்றும் 200 கிராம் மங்னீசியம் சல்பேற்று என்பவற்றை மண்ணிற்கு இடுவதன் மூலம் மஞ்சள் நாரத்தை விளைச்சலின் தரம் அதிகரிப்பது கண்டறியப்பட்டது.
- வளம் மிக்க சேதனப் பசளையினை உற்பத்தி செயற்பாட்டிற்கு தெரிவு செய்யப்பட்ட மா மற்றும் நுண் போசணைகளை உள்ளடக்கிய உயிரியல் கரி வகை 4 உற்பத்தி செய்யப்பட்டது வாழைப் போலித் தண்டிலிருந்து உற்பத்தி செய்த உயிரியல் கரியில் போசணையை அதிக் கூடிய அளவில் உறிஞ்சும் ஆற்றல் உள்ளதாக வெளிக்காட்டி உள்ளது.
- முருஷிகே மற்றும் ஸ்டுக் ஆரம்ப ஊடகம் மற்றும் வைரத் தாவர ஊடகங்கள் எனும் ஊடகங்களில் 6 BAP மற்றும் கைனடின் கலப்பதன் மூலம் ஈரப்பலாவில் நுண் இனப்பெருக்கம் வெற்றிகமாக மேற்கொள்ளப்பட்டது.
- 5000 இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளிற்கு இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இழைய வளர்ப்புக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக புதிய ஆயிரம் இனப்பெருக்க நடுகை ஊடகங்கள் தாபிக்கப்பட்டு உள்ளன.
- மாங்காய்களின் அறுவடைக்கு பின் தாக்கும் பங்கசு நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு லக்ரிக் அமிலத்தை நொதிக்கச் செய்வதன் மூலம் தயாரிக்கப்படும் இயற்கையான துணை உற்பத்திக்களைப் பயன்படுத்தும் தொழினுட்பம் அறிமுகம் செய்யப்பட்டது.
- ரத்ன மற்றும் CP-13 எனும் பெற்றோர் பரம்பரை ஊடாக ஹொரணை பப்பாசி கலப்பினம் - 1 இனப்பெருக்க விதை ஒரு கிலோகிராம் உற்பத்தி செய்யப்பட்டது.
- ஹொரணை கோல்ட் கொடித்தோடை இனப்பெருக்க விதை இரண்டு கிலோகிராம் உற்பத்தி செய்யப்பட்டது.
- கொத்தணிக் கிராமம் ஒன்றினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ரஹங்கல பிரதேசத்தின் 200 விவசாயிகளிற்கு மஞ்சள் நாரத்தை மூன்று இனங்களினுள் (ஹொரணை எஹிமி 01, ஹொரணை எஹிமி 02, ஹொரணை எஹிமி 03) 10000 ஒட்டுக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.



**விவசாயத் திணைக்களம் தொடர்பான தகவல்கள், புதிய விவசாய உற்பத்திகள், விவசாய தொழினுட்பம், வெளியீடுகள் மற்றும் புதிய நிகழ்ச்சிகள் தொடர்பாக அறிவதற்கு**
**www.doa.gov.lk**
**விவசாய திணைக்களத்தின் வலை தளம்**

நிர்வாக ஆலோசகர்: டபிள்யூ. எல். ஹிரான் பீரிஸ்
ஆலோசனை : டி. எச். ஜே. கே. கீர்த்திரத்ன
தயாரிப்பு: டி. டி. டி தர்மதாச, ஜே. ஆர். பி. ஹெரத், எம். டி. சமரகோன், எஸ். எம். சி. என். சமரகோன்
தமிழ் செம்மையாக்கம் : ஐ. எஸ். எம். ஹலீம்தீன்
தமிழாக்கம் : ரா. அச்சுதா
கணினி பக்க அமைப்பு : அசிதா பஸ்நாயக்க, திலினி மதுஷிகா, ஜி.டி. எரியகம